Details Of The Secured Asset: Schedule Of The Property Virudhunagar Registration, Sattur Sub Registration, Virudhunagar District, Sattur Taluk, O. Mettupatti Village Housing In The Above Village Under Natham Survey No.137 On 6 Acres 43 Cents Towards Its South 3 Acres 48 Cents In Which As Per Present Sub Division Survey No. 137/1 In Its Centre Measuring About East-West 100 South- North 45 Totally 4500 Square Feet Of Vacant Land For Which Four Boundaries Are As Follows: **North** Ayyachamy Vacant Land **East** East-West 12ft Width North-South Street **South** Mariammal Property **West** East-West 10ft Width North-South Street
Vacant Land Within The Above Boundaries Is Present, For The Above Mentioned Schedule Property As Per The Present Sub Division The Survey Number Is Survey No.137/28. The Schedule Property Is Out Of Undivided Share 2 Out Of 3 Shares. Schedule Is Right. Schedule Property Comes Under Sattur Panchayat Union..

You the above Borrower/S are therefore called upon to make payment of the outstanding dues as mentioned hereinabove in full Within 60 Days of this Notice failing which the undersigned shall be constrained to take action under the SARFAESI act to enforce the above-mentioned securities. Please note that as per Section 13(13) of The Said Act, You are restrained from transferring the above-referred securities by way of sale, lease or otherwise without our consent.

Place: Tirupur/Virudhunagar/Kanchipuram
Date: 30.06.2023

Sd/- Authorized Officer
For Nido Home Finance Limited
(formerly known as Edelweiss Housing Finance Limited)

தமிழ்நாடு அரசு
பேரூராட்சிகள் துறை. தேவர்சோலை தேர்வு நிலை பேரூராட்சி - நீலகிரி மாவட்டம்
ந.க.எண். 281 / 2023 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 27.06.2023

தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் தேவர்சோலை தேர்வு நிலை பேரூராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டு (K.N.M.T) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் (N.S.M.T) நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

அட்டவணை

வ. எண்	வேலையின் வயர்	மதிப்பீடு கு.இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை கு (E Payment)	ஒப்பந்ததாரர் தகுதி
	K.N.M.T (2023- 2024) (TWO COVER SYSTEM)			
1.	தேவன் நெ. 2 முதல் தேவன் நெ. 1. ஒற்றுவயல் - பேபி நகர்- மச்சிக்கொல்லி. கம்பாடி முதல் சங்கரன்கொல்லி மற்றும் மாரக்கரை முதல் கோடமூலா வரை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்.	241.00	2,41,000/-	Class - 1
	N.S.M.T (2023- 2024) (TWO COVER SYSTEM)			
2.	தேவர்சோலை முதல் புழும்பட்டி வரை தார்சாலை மேம்பாடு செய்தல்.	129.44	1,29,440/-	Class - 1

1) தேவர்சோலை தேர்வு நிலை பேரூராட்சியில் மேற்கண்டும் பணி மேற்கொள்ள செயல் அலுவலரால் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
2) பணி கு.370.44 லட்சம் மதிப்புள்ளது.
3) ஒப்பந்தப்புள்ளி நகலானவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தபுள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4.பொதுவான நேரம் மற்றும் நாள்:

அ)	ஒப்பந்த நகலா கிறக்கம் செய்தல்	28-06-2023
ஆ)	ஒப்பந்ததாரர் கலந்தாய்வு கூட்டம் (Prebid Meeitng)	05-07-2023
இ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	14-07-2023 மாலை 3.00 மணி வரை
ஈ)	தொழில் நுட்ப தகுதி ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	14-07-2023 மாலை 3.30 மணி
உ)	தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு	17-07-2023
ஊ)	விலை விக்கு ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள்	18-07-2023

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின். அஃது அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில்,அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

(ஒம்) ப.வசீலி, தலைவர்,
தேவர்சோலை (தேர்வு நிலை) பேரூராட்சி,
தேவர்சோலை – நீலகிரி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 3330 / ஒப்பந்தப்புள்ளி / 2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

(ஒம்) கே.ஜி. பிரதீப்குமார், செயல் அலுவலர்,
தேவர்சோலை (தேர்வு நிலை) பேரூராட்சி,
தேவர்சோலை – நீலகிரி மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
சங்ககிரி சிறப்புநிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்.

ந.க.எண்.221/2023 — கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024 — நாள்:27.06.2023
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை (ரூ.)
1	வார்டு எண்.4 டிஸ்பென்சரி மெயின் ரோடு முதல் தெற்கு தெரு, டிஸ்பென்சரி ரோடு முதல் தெற்கு தெரு கிழக்கு, முதல் குறுக்கு தெரு, டிஸ்பென்சரி ரோடு முதல் தெற்கு தெரு 2வது குறுக்குத் தெரு, டிஸ்பென்சரி ரோடு முதல் தெற்கு தெரு 2வது கிழக்குத் தெரு, முதலாவது வடக்குத் தெரு மற்றும் டிஸ்பென்சரி மெயின் ரோடு 2வது தெற்கு தெரு பகுதிகளில் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல்.	103.90	104000/–

மேற்கண்ட பணிக்கு இணையதளத்தின் மூலமாக மட்டும் E-Token / Digital Signature Card-யை உபயோகித்து https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 14.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம். இப்பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையை Executive Officer, Sankagiri Town Panchayat என்ற முகவரிக்கு எடுக்கப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வரைவோலை மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஆகியவற்றை 14.07.2023 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் சங்ககிரி பேரூராட்சி அலுவலகத்தில் வந்து சேரும்மாறு அனுப்ப வேண்டும். இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14.07.2023 ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப உறை மட்டும் திறக்கப்படும். கூடுதல் விவரங்கள் பெற https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள ஆவணங்

‘‘கல் குவாரி உரிமையாளர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வாருங்கள்’’: தி.மு.க. அரசுக்கு ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 30–

கல் குவாரி உரிமையாளர்களின் போராட்டத்தினை தி.மு.க. அரசு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தொழில்மயமான மாநிலங்களின் வரிசையில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டுமென்றால், அதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் மாநில அரசுக்கு உண்டு. இந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான், அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைப்பதோடு, வேலைவாய்ப்புகள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி நாட்டின் பொருளாதார வளர்ச்சி உயர்வதற்கான உகந்த சூழ்நிலை ஏற்படும். ஆனால், கடந்த 2 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் இதற்கு முற்றிலும் முரணான சூழ்நிலை நிலவுகிறது.

தமிழ்நாட்டில் ‘இனி தொழில் செய்யவே முடியாது’ என்ற நிலைக்கு வந்துள்ளமூவாயிரத்திற்கும் மேற்பட்ட கல் குவாரி அனுமதி பெற்றிருப்போர் மற்றும் கல் உடைக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள், கடந்த மூன்று நாட்களாக காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்குக் காரணம், சரளைக்கற்கள் போன்ற சிறு கனிமத்திற்குகூட கனிமத் திட்டம் அளிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கோரியுள்ளதாகவும், இதுபோன்ற நிபந்தனைகளுடன் தொழிலை தொடர முடியாது என்றும், பெரிய கனிமத்திற்குத்தான் இது பொருத்தமாக இருக்கும் என்றும், இதுபோன்ற நிபந்தனைகளை 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு விதித்ததாகவும், இது அண்டை மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், தமிழ்நாடு அரசு தான் இதனை நடைமுறைப்படுத்துகிறது.

குவாரிகளுக்கான அனுமதியை பொறுத்தவரை ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களில் எளிமையான நடைமுறை பின்பற்றப்படுவதாகவும், தமிழ்நாட்டில் அனுமதி வழங்குவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதாகவும், ஒரு இடத்தில் பல குவாரிகள் இயங்குவதற்கான பரப்பளவு 25 எக்டேரிலிருந்து 5 எக்டேராக குறைக்கப்பட்டுவிட்டதாகவும், குவாரி உரிமையாளர்களை சமூக விரோதிகள் மிரட்டி பணம் பறிப்பதாகவும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியுள்ளதாகவும் கல் குவாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

2 ஆயிரம் லாரிகளில் கற்கள் வந்த நிலையில்...

பிற மாவட்டங்களிலிருந்து சென்னையை நோக்கி ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 2 ஆயிரம் லாரிகளில் கற்கள் வந்து கொண்டிருந்த நிலையில், தற்போது இதில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதாக லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். கல் குவாரி உரிமையாளர்கள் மற்றும் கல் உடைக்கும் ஆலைகளின் வேலை நிறுத்தம் தொடர்ந்தால், கட்டடத் தொழில் மிகப் பெரிய பாதிப்பினைச் சந்திக்கும்.

இதன் காரணமாக கட்டுமானச் செலவு மேலும் பன்மடங்கு அதிகரிக்கும் என்றும், இதன் விளைவாக ஏழையெளிய மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்றும் கட்டுமானத் துறையினர் தெரிவிக்கின்றனர். இது தவிர, கட்டுமானத் துறையுடன் தொடர்புடைய குழாய் பதிக்கும் பணிகள், மின்சார சாதனம் பொருத்தும் பணிகள் என பல பணிகள் பாதிக்கப்படக்கூடும். இந்த வேலைநிறுத்தம் கட்டுமானத்துறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு அரசு தலையிட்டு இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று கட்டுமானத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

சட்ட விரோத குவாரிகளை தடுக்க வேண்டுமென்றால், ஆன்லைன் மூலம் உரிமம் கொடுக்கும் முறையையும், ட்ரோன் மூலம் ஆய்வு மேற்கொள்ளும் முறையையும் தமிழ்நாடு அரசு விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், கல் குவாரிகளையும், கல் உடைக்கும் ஆலைகளையும் இயக்குவதற்கு உரிய அனுகூலமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் கல் குவாரி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனுமதி ஓராண்டாக குறைப்பு

மேலும், திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளியில் அம்மிக்கல், ஆட்டுக்கல், கிரைண்டருக்கான கல் ஆகியவை கைத்தொழில் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த அனுமதி தற்போது ஓராண்டாக குறைக்கப்பட்டு விட்டதாகவும், இதுநாள் வரை இதற்கான அனுமதியை மாவட்ட கலெக்டரிடமிருந்து பெற்று வந்ததாகவும், தற்போது இந்த அதிகாரம் சென்னையில் உள்ள கனிமவளத் துறை ஆணையருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும், இந்த அதிகாரத்தை மீண்டும் மாவட்ட கலெக்டருக்கு வழங்க வேண்டுமென்றும் அப்பகுதியில் இந்தத்தொழிலில்ஈடுபட்டுள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல் குவாரி உரிமையாளர்கள், கல் உடைக்கும் உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தத்தின் காரணமாக லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயமும், கட்டுமானத் துறை உள்ளிட்ட பல துறைகள் முடங்கும் ஆபத்தும் உருவாகியுள்ளது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்படும்.

கைத்தொழிலாக மேற்கொள்ள...

எனவே, கல் குவாரிகள் மற்றும் கல் உடைக்கும் ஆலைகளின் வேலை நிறுத்தத்தினை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரும் வகையில், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோரை அழைத்துப் பேசி அதற்கு ஒரு சுமூக தீர்வு காணவும், திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளியில் அம்மிக்கல், ஆட்டுக்கல் போன்றவற்றை கைத்தொழிலாக மேற்கொள்வதற்கான அதிகாரத்தை மாவட்ட கலெக்டருக்கு மீண்டும் வழங்கவும் முதலமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

காஞ்சீபுரம் மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளர்

ஆர்.வீ.ரஞ்சித்குமார் மகள் மஞ்சள் நீராட்டு விழா: ஓ.பன்னீர்செல்வம் நேரில் வாழ்த்து

காஞ்சீபுரம், ஜூன் 30–

காஞ்சீபுரம் மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளர் ஆர்.வீ. ரஞ்சித்குமார் மகள் மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சியில் தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேரில் வருகை தந்து வாழ்த்தினார்.

காஞ்சீபுரம் மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளரும், தொழிலதிபருமான முத்தியால்பேட்டை ஆர். வீ.ரஞ்சித்குமார் மகள் ஆர்.வீ.ஆர். மனிஷா மஞ்சள் நீராட்டு விழா நேற்று மாலை சென்னை டிடிகே சாலை, ஹோட்டல் கிரவுன் பிளாசாவில் (அடையாறு கேட் ஹோட்டல்) கோலாகலமாக நடைபெற்றது

தமிழக முன்னாள் முதல்வர் அம்மா ஆசியுடன், கழக ஒருங்கிணைப்பாளரும், தமிழக முன்னாள் முதல்வரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் இவ்விழாற்கு நேரில் வருகை தந்து தலைமை வகித்தார்.

முன்னதாக விழாவிற்கு வருகை புரிந்த அவரை முத்தியால்பேட்டை ஆர்.வீ. ரஞ்சித்குமார் மற்றும் அவரது துணைவியாரும் ஒன்றிய கவுன்சிலருமான ஆர்.பிரேமா ரஞ்சித் குமார் ஆகியோர் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். பிறகு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், ஆர்.வீ.ரஞ்சித்குமார் மகள் ஆர்.வீ.ஆர்.மனிஷாவை மலர் தூவி மனதார வாழ்த்தினார்.

இந்த மஞ்சள் நீராட்டு விழாவில், கழக துணை ஒருங்கிணைப்பாளரும், அமைப்பு செயலாளருமான ஜெ.சி. டி.பிரபாகர், முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், ஆன்மீக பிரமுகரும், ஓ.பி.எஸ். மகனுமான ஜெயபிரதீப், முன்னாள் சென்னை மாநகராட்சி துணை மேயர் கராத்தே தியாகராஜன், தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எம். பாபு, வடசென்னை வடக்கு, மேற்கு மாவட்ட கழக செயலாளர் கொளத்தூர் டி.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் தமிழக அரசு தலைமை செயலாளர் ராமமோகனராவ், முன்னாள் உயர் போலீஸ் அதிகாரி மனோகரன், முன்னாள் மாவட்ட வருவாய் துறை அதிகாரி க.மோகனசுந்தரம், மாநில எம்ஜிஆர் இளைஞரணி நிர்வாகி, எஸ். எஸ்.ஆர்.சத்தியா, காஞ்சீபுரம் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.யு.எஸ். சோமசுந்தரம், கழக பொருளாளர் வக்கீல் வீ.வள்ளிநாயகம், ஆன்மீக பிரமுகர்கள் கே.ஏ.பால், அவரது துணைவியார் ஜெனிபர் பால், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.வீ.ஜோதியம்மாள், வக்கீல் ஆர்.வீ.உதயன், மாவட்ட கழக அவைத்தலைவர் எஸ்.ரங்கநாதன், வாலாஜாபாத் பேரூராட்சி கழக செயலாளர் ஆர்.ஜெயகாந்தன், ஆன்மீக பிரமுகர்கள் கவிஞர் எஸ்.முருகவேள், மெடிக்கல் பி.தீனா, மெடிக்கல் சீனிவாசன், காஞ்சீபுரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஷாலினி வேலு, பொருளாளர் எ.வஜ்ஜிரவேலு, இணை செயலாளர் கோமளா எழிலரசன், மாகரல் சசி, பெருநகர் கோபால் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், போலீஸ் உயர் அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், நகர பிரமுகர்கள், உள்பட கழகத்தினர், பொதுமக்கள் அனைவரும் நேரில் வருகை தந்து விழாவினை சிறப்பித்து, ஆர்.வீ.ஆர். மனிஷாவை மனதார வாழ்த்தினார்கள்

மாலையில் பிரபல இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் இன்னிசை கச்சேரி நடைபெற்றது.

மஞ்சள் நீராட்டு விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும், முத்தியால் பேட்டை ஆர்.வீ. ரஞ்சித்குமார் மற்றும் அவரது துணைவியார், ஒன்றிய கவுன்சிலர் ஆர். பிரேமாரஞ்சித்குமார், வக்கீல் ஆர்.வீ.உதயன், ஆகியோர் வரவேற்றனர். வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. பிறகு அனைவருக்கும் ஒரு பெரிய தாம்பூலம் பையுடன் கடிகாரம் வழங்கப்பட்டது.

கேரளாவில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை: 4 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை

திருவனந்தபுரம், ஜூன் 30–

கேரளாவில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இதன் காரணமாக 4 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

கேரளாவில் தாமதமாக தொடங்கிய தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் அடைந்துள்ளது. இதையடுத்து அடுத்த 3 நாட்களுக்கு கேரளாவில் கனமழை பெய்ய வாய்ப்பு ஆலப்புழா, கண்ணூர், கோழிக்கோடு மற்றும் காசர்கோடு மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

இந்த மாவட்டங்களில் 64.5 மில்லி மீட்டர் முதல் 115.5 மில்லி மீட்டர் வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மருத்துவக் கழிவுகளை எரித்த அரசு ஊழியர் தீயில் கருகி பலி

மணப்பாறை, ஜூன் 30–

மருத்துவ கழிவுகளை எரித்த அரசு ஆரம்ப சுகாதார நிலைய டெங்கு ஒழிப்பு ஊழியர், எதிர்பாராத விதமாக அவரின் சட்டையில் திடீரென தீப்பற்றி எரிந்ததில் அவர் கருகி பலியானார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறையை அடுத்த மரவனூரைச் சேர்ந்தவர் கலையரசன் (வயது 28). இவர் மரவனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொசு ஒழிப்பு ஊழியராக தற்காலிக அடிப்படையில் வேலை பார்த்து வந்தார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு அவரை மணப்பாறை நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பணிக்கு வரச் சொல்லி உள்ளனர். அதன்படி பணிக்கு வந்த கலையரசன் மருத்துவ கழிவுகள் மற்றும் காலாவதியான மருந்து மாத்திரைகளை எரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக அவரின் சட்டையில் திடீரென தீப்பிடித்து எரியவே என்னசெய்வதென்று தெரியாமல் தவித்த அவர் எரியும் நெருப்புடன் சட்டையை கழற்றி வீசியபடி மருத்துவமனை வளாகத்தில் ஓடினார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் தீக்காயம் அதிக அளவில் இருந்ததால் மேல் சிகிச்சைக்காக கலையரசன் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் பற்றி மணப்பாறை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பதியில் இலவச தரிசனத்துக்கு பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருப்பு

நேற்று ஒரேநாளில் ரூ.3.75 கோடி காணிக்கை

திருப்பதி, ஜூன் 30–

திருப்பதியில் இலவச தரிசனத்துக்கு பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து தரிசம் செய்தனர்.

கோடை விடுமுறை முடிந்து பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் திருப்பதி மலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் இன்று திருப்பதி மலைக்கு பக்தர்கள் வருகை வெகுவாக அதிகரித்து, இலவச தரிசனத்திற்காக 5 கிலோ மீட்டர் நீள வரிசையில் 24 மணி நேரம் பக்தர்கள் காத்திருக்கின்றனர்.

ரூ.3.75 கோடி காணிக்கை

பக்தர்கள் வருகை அதிகரித்து உள்ள காரணத்தால், திருப்பதி மலையில் உள்ள வைகுண்டம் காத்திருப்பு மண்டபங்களில் இருக்கும் அனைத்து அறைகளிலும் பக்தர்கள் நிரம்பி உள்ளனர்.

திருப்பதியில் உள்ள இலவச தரிசன டோக்கன் கவுண்டர்களில் டோக்கன் வாங்காமல் திருமலைக்கு சென்று வைகுண்டம் காத்திருப்பு மண்டபங்களில் இடம் கிடைக்காத பக்தர்கள் ஐந்து கிலோ மீட்டர் நீள வரிசையில் இலவச தரிசனத்திற்காக காத்திருக்கின்றனர்.

பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் ஆகிய அடிப்படை வசதிகளை தேவஸ்தான நிர்வாகம் செய்து கொடுத்து வருகிறது. 300 ரூபாய் கட்டண தரிசனத்திற்கு 4 மணி நேரமும், இலவச தரிசன டோக்கன் வாங்கிய பக்தர்கள் 5 மணி நேரமும் காத்திருந்து ஏழுமலையானை வழிபட்டு செல்கின்றனர். நேற்று 62,005 பக்தர்கள் ஏழுமலையானை வழிபட்டு, கோவில் உண்டியலில் 3 கோடியே 75 லட்ச ரூபாயை காணிக்கையாக சமர்ப்பித்து இருந்தனர்.

இடத்தகராறு: வக்கீல் உள்பட 2 பேர் வெட்டிக்கொலை

தென்காசி, ஜூன் 30–

தென்காசியில் இடத்தகராறு காரணமாக வழக்கறிஞர், அவரது பெரியப்பா ஆகிய இருவரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இதுதொடர்பாக ராணுவ வீரரை போலீசார் தேடி வருகின்றனர்.

ஆலங்குளம் அருகேயுள்ள நெட்டூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னதுரை மகன் அசோக்குமார் (வயது 29). வழக்குரைஞர். இவருக்கும், உறவினர் குழந்தைபாண்டியின் மகனான ராணுவ வீரர் சுரேஷ்(29) என்பவருக்கும் இடையே இடத்தகராறில் முன்விரோதம் இருந்து வந்தது. அசோக்குமாருக்கு ஆதரவாக, அவரது பெரியப்பா துரைராஜ் (வயது 55) பேசி வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று இரவு அப்பகுதியில் பேருந்து நிறுத்தம் அருகே நின்றிருந்த துரைராஜை, சுரேஷ் அரிவாளால் வெட்டியதுடன், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அசோக்குமாரையும் வெட்டிவிட்டு தப்பி ஓடிவிட்டார். இதில், அசோக் குமார் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். துரைராஜ் பலத்த காயங்களுடன் ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இத்தகவல் அறிந்த தென்காசி எஸ்.பி. சாம்சன், ஆலங்குளம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அசம்பாவிதங்களைத் தடுக்க பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய ராணுவ வீரர் சுரேஷை தேடி வருகின்றனர்.

சிகரெட் லைட்டர்கள் இறக்குமதிக்கு தடை: மத்திய அமைச்சருக்கு மு.க.ஸ்டாலின் நன்றி

சென்னை, ஜூன் 30–

சிகரெட் லைட்டர்கள் இறக்கு மதிக்கு தடை விதிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:–

கடந்த ஆண்டு நான் எழுதியிருந்த கடிதத்தில் கோரியபடி, எங்கள் கவலைகளுக்கு செவிமடுத்து, பாக்கெட் சிகரெட் லைட்டர்கள் இறக்குமதிக்கு தடை விதிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மத்திய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு நன்றி. இது தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு லட்சத்துக்கும் அதிகமானோரின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான முக்கியமான நடவடிக்கை ஆகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

காணவில்லை

திருமதி.G.கிரிஜா பெ/வ-65 எனும் நான் க/பெ, திரு. கோபிநாதன், வசிப்பிடம்: எண்.72 D, 21வது தெரு, L பிளாக், அண்ணாநகர் கிழக்கு, செ- 600 102. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம் திருவள்ளூர் பதிவு மாவட்டம், 1.எண்.இணை திருவள்ளூர் சார்பதிவகத்தைச் சேர்ந்த எண்.164 சிறுவானூர் கிராமத்தில், அரசு அங்கீகாரம் எண் M 88-21-L.P.No.17ன் படி பெறப்பட்ட ரமணர் நகர் சர்வே எண்.78/1 C2, மனை எண். 194க்கு ஆவண எண் 736/1990 மற்றும் 2445 / 1990 உப்பட்ட பத்திரம் காணவில்லை கண்டெடுத்தவர்கள் அனுகவும்.

7010377703

காணவில்லை

திருவள்ளூர்-602024, பெருமாள்பட்டு, ரமணா நகர், Plot No.30/1 என்ற முகவரியில் வசிக்கும் C.கிருஷ்ணன் ஆகிய நான் கடந்த 18.04.2023ம் தேதி வேப்பம்பட்டு இரயில் நிலையம் அருகே எனது அசல் ஓய்வூதிய புத்தகத்தை (PPO No.602008011222443) தொலைத்துவிட்டேன். கண்டெடுப்பவர்கள் மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

C.Krishnan.
cell: 9445689450

பெயர் மாற்றம்

CADER BARAKATH, தந்தை பெயர்: Cader, பிறந்த தேதி: 02.03.1958, நெ.56, மிடில் தெரு, கீழ்புரம், அதிராம்பட்டினம், தஞ்சாவூர் – 614701, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Ahamed Barakkathulla Cader**, என்று அழைக்கப்படுகிறேன்.

CADER BARAKATH

பெயர் மாற்றம்

Sur name: கலியபெருமாள் Given name: விஜயலட்சுமி தந்தை பெயர்: கலியபெருமாள் கணவர் பெயர் : குணசேகரன் பிறந்த தேதி 11.03.1972 நெ 6/95, மஞ்சு அபார்மெண்ட்ஸ் திருவள்ளுவர் சாலை நெசப்பாக்கம், K K நகர், சென்னை–600078 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Sur name: **குணசேகரன்** Given name: **விஜயலட்சுமி** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname கலியபெருமாள்
Old Given name விஜயலட்சுமி

பெயர் மாற்றம்

Saravanan Muthukumaraswamy, தந்தை பெயர்: Muthukumaraswamy, பிறந்த தேதி: 04.01.1949, S3, B–பிளாக், 2வது மாடி, R.S. LUMINOUS, 4A, காந்தி தெரு, ஓஎம்ஆர், கொட்டிவாக்கம், சென்னை – 600 041, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Saravanan Palayam Ragham,** என்று அழைக்கப்படுகிறேன்.

Saravanan Muthukumaraswamy

பெயர் மாற்றம்

MATHESH MANOHARAN, தந்தை பெயர்: Manoharan, பிறந்த தேதி: 12.11.1984, நெ.1/2, 2வது மாடி, ஸ்ரீ சக்தி நகர் கிழக்கு தெரு, அரும்பாக்கம், சென்னை–600106, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MADHESH MANOHARAN**, என்று அழைக்கப்படுகிறேன்.

MATHESH MANOHARAN

பெயர் மாற்றம்

Thiru.D.KARTHEKEYAN (Hindu), தந்தை பெயர்: Thiru.T.S. Devanand, பிறந்த தேதி: 06.07.1993, (சொந்த மாவட்டம்: சென்னை), நெ.E1002, Mantri Synergy, ராஜிவ்காந்தி சாலை, படூர், காஞ்சிபுரம் – 603 103, என்ற முகவரியில் வசிக்கும் நான் இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியதால் 9.01.2023 முதல் இனி **SIDDIQUE** (Islam), என்று அழைக்கப்படுகிறேன்.

Thiru.D.KARTHEKEYAN (Hindu)

SHRIRAM FINANCE LTD
MARAIMALAINAGAR BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN11S1465	TATA LPT 1109	2016

CONTACT: PURUSHOTHAMAN .L 8015958965

ரிஷப் இன்டர்மீடியட்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN: - U24117TN1992PTC023926
பதிவு அலுவலகம்: 203 கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம், சென்னை 600115.
EMAIL: sunil_srisrimal@yahoo.co.in

பிராந்திய இயக்குனர் முன்பாக, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், தென் பிராந்தியம், சென்னை

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13 துணைப்பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014 விதி 30 துணை விதி (5) பிரிவு (ஏ)ன் விஷயத்தில் மற்றும்

ரிஷப் இன்டர்மீடியட்ஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 203 கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம், சென்னை 600115, ... **விண்ணப்பதாரர்**

5 ஜூன், 2023, திங்கட்கிழமை அன்று நடைபெற்ற **அசாதாரண பொதுக்கூட்டத்தில்** நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை **‘‘தமிழ்நாடு மாநிலத்தில்’’ இருந்து ‘‘புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு’’** மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் மாற்றம் செய்வதை உறுதி செய்ய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் பிராந்திய இயக்குனர், கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், தென் பிராந்தியம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து பிராந்திய இயக்குனர், கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், தென் பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை–600 006 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 14 நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அதன் நகல் ஒன்றை மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குழு உத்தரவுப்படி
ரிஷப் இன்டர்மீடியட்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
அனில் குமார்
இயக்குனர்
(DIN: 01742543)

இடம் : சென்னை
தேதி : 05.06.2023

பொது அறிவிப்பு

சென்னை–600 044, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, முத்துசாமி நகர், பவானி தெரு, மனை எண்.11ல் வசிக்கும் எனது கட்சிக்காரர் S. ராமையா அவர்களின் மனைவி திருமதி. R. கௌசல்யா அவர்களின் சார்பாக நான் தெரிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், கடந்த 28.09.1988ல் எனது கட்சிக்காரர் செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், தாம்பரம் கிராமம், நஞ்சை சர்வே எண்.8/1Aல் 1800 சதுர அடி கொண்ட மனை எண்.17ஐ சுப்பண்ண சவுத்திரி அவர்களின் குமாரர் வெங்கடேசன் அவர்களின் பொது அதிகார முகவரான குமார் அவர்களின் மனைவி திருமதி. வரலட்சுமி அவர்களிடமிருந்து கிரையம் பெற்று அக்கிரையப் பத்திரம் தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1989ம் ஆண்டின் பத்திர எண்.528 ஆக பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை கடந்த 14.06.2023 தேதியன்று மாலை சுமார் 6 மணியளவில் தனது HOnda Active Reg.No.TN11T1624 வண்டியில் தான் மேற்படி கிரையம் பெற்ற இடத்தை கிரையம் செய்ய பல்லாவரத்தில் உள்ள இந்திரா காந்தி ரோட்டில் (சிங்கப்பூர் ஷாப்பிங் அருகில்) செல்லும்போது தவற விட்டு விட்டதாக தெரிவிக்கிறார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கிறார்.

எனவே மேற்படி அசல் கிரைய ஆவணம் எண்.528/1989ஐ எவரேனும் கண்டெடுத்தால் மேற்கண்ட எனது கட்சிக்காரர் முகவரிக்கோ, கீழ்கண்ட எனது முகவரிக்கோ தெரிவிக்க வேண்டுமாறும், தவிர்த்து துஷ்பிரயோகம் செய்யும்பட்சத்தில் அது எந்தவிதத்திலும் என் கட்சிக்காரர்களை கட்டுப்படுத்தாது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

F.CECIL DEVARAJ,
Advocate & Notary,
No.7, Rajiv Gandhi Nagar,
Rajakilpakkam, Chennai–600 073.
Mobile No.: 9170003564

டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்
TTK HEALTHCARE
பதிவு அலுவலகம்: எண். 6, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086.
CIN: L24231TN1958PLC003647 | இணையதளம்: www.ttkhealthcare.com
மின்னஞ்சல்: investorcare@ttkhealthcare.com
தொலைபேசி: 044 28116106 | தொலைநகல்: 044 28116387

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

(1) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) வழங்கிய டிசம்பர் 28, 2022-ஆம் தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 10/2022 உடன் படிக்க வேண்டிய மே 05, 2020 - ஆம் தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) வழங்கிய **ஜனவரி 05, 2023**- ஆம் தேதியிட்ட சுற்றறிக்கை எண். **SEBI/HO/CFD/POD-2/P/CIR/2023/4** (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது). மேலும் நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பொருந்தக்கூடிய விதிகள் இவைகளுக்கு இணங்க நிறுவனத்தின் 65வது ஆண்டுப் பொதுக் கூட்டம் (AGM) ஜூலை 25, 2023 அன்று செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு காணொளி மற்றும் பிற கேட்பொலி காட்சி வழிமுறைகள் (VC/OAVM) மூலம் நடைபெற உள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

(2) மேற்கண்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்